இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 257 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 14 – ஞாயிற்றுக்கிழமை 27 ஏப்ரல் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 257 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 14 - Sunday 27 April 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.4.2025) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாகச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனுள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.4.2025) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, 2025–2026 ஆம் ஆண்டிற்கான தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாகச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சக்சேனா, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.சாய்குமார், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி. அருண் ராய் மற்றும் துறையின் உயரதிகாரிகள் உடன் உள்ளார்கள்.

### ஜூன் மாதம் 9 ஆயிரம் இடங்களில் நடைபெறும் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்களில் முறையாக விண்ணப்பித்தால்

# தகுதி வாய்ந்த அனைவர்க்கும் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப்.27 -**

**சட்டப்பேரவையில் நேற்று, விவாதத்தின் நடுவில் குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “வருகிற ஜூன் மாதம் தமிழ்நாட்டில் 9 ஆயிரம் இடங்களில் நடைபெறும் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்களில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ யாருக்கெல்லாம் விடுபட்டிருக்கிறதோ, அவர்கள் முறையாக விண்ணப்பித்தால், நிச்சயம் அவர்களுக்கும் ‘மகளிர் உரிமைத் தொகை’ வழங்கப்படும் என்று அறிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தொடர்பாக உறுப்பினர் ரா. ஈஸ்வரனின் கோரிக்கைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அளித்த பதில் வருமாறு:-

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நம்முடைய உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தின்கீழ், ஒரு கோடியே 14 இலட்சம் பேர்களுக்கு அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தகுதிவாய்ந்த எல்லோருக்கும் அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.



ஆனால், இன்னும் இதிலேவிடுபட்டிருக்கக்கூடியவர்களுக்க வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, இந்த அவையிலும் அது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, ‘மக்களுடன் முதல்வர்’ என்ற திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை ஏற்று, அவற்றை உடனடியாக நிறை வேற்றுகிற பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

அந்தப் பணியைப் பொறுத்தவரையில், வருகிற ஜூன் மாதம், 4 ஆம் கட்டமாக ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின்கீழ் கோரிக்கைகளைக் கேட்கக்கூடிய பணிகளை நாங்கள் தொடங்கவிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணி 9 ஆயிரம் இடங்களில் நடைபெறவிருக்கிறது. அப்படி நடைபெறுகிறபோது, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை யாருக்கெல்லாம் விடுபட்டிருக்கிறதோ, அவர்கள் முறையாக விண்ணப்பித் தால் நிச்சயமாக விரைவில் அவர்களுக்கும் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

---

### உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டுக்கு அழைப்பு!

## குடியரசுத் துணைத் தலைவர் - ஆளுநருக்கு எதிராக கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்!

உதகை, ஏப். 27 -

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து உதகையில் பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகள் சார்பில் கருப்புக் கொடி போராட்டம் நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் மாநாட்டுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்பு விடுத்திருந்தார். உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் மீறி பல்கலைக்கழக துணைவேந்தர் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்த ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு கடும் கண்டனம் எழுந்துள்ளன. இந்நிலையில், ஆளுநர் ஆர்.என். ரவி மற்றும் அவருக்கு துணை போகும் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் ஆகியோரை கண்டித்து உதகையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திராவிட தமிழர் கட்சி சார்பில் நடைபெற்ற இந்த கருப்புக்கொடி முற்றுகை போராட்டத்தில் ஆளுநருக்கு எதிராக அவர்கள் கண்டன முழக்கமிட்டனர்.

**உதகை பேருந்து நிலையம்!**

இதேபோன்று, ஆளுநர் ரவி மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் ஆகியோரை கண்டித்து உதகை பேருந்து நிலையம் முன்பு தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**சென்னை நுங்கம்பாக்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போராட்டம்!**

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்யக்கோரி ஒன்றிய அரசின் அலுவலகமான சென்னை சாஸ்திரி பவனை முற்றுகையிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் தலைமையில் திரண்ட, அக்கட்சியினர் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு இந்திய கம்யூனிஸ்ட் போராட்டம்!**

இதேபோன்று, ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து சென்னையில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, துணைவேந்தர்கள் மாநாட்டை நடத்துவதற்கு கண்டனம் தெரிவித்து முழக்கம் எழுப்பப்பட்டது.

---

### காஷ்மீருக்குச் சுற்றுலா சென்றவர்கள் பத்திரமாக சென்னை திரும்பினர்!

## தமிழ்நாடு திரும்ப உடனடியாக நடவடிக்கை எடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தனர்!

*சென்னை, ஏப். 27-*

*ஜம்மு, காஷ்மீருக்குச் சுற்றுலா சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பத்திரமாக சென்னை திரும்பினார்கள். தமிழ்நாடு திரும்ப உதவிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர்.*

*ஜம்மு, காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 25க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். அங்கு சுற்றுலாவிற்குச் சென்ற தமிழ்நாட்டு சுற்றுலாப் பயணிகளை உடனடியாக தமிழ்நாடு அழைத்து வர தமிழ்நாடு அரசு சார்பில் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. ஏற்கனவே, டெல்லியில் இருந்து 73 சுற்றுலாப் பயணிகள் சென்னை திரும்பிய நிலையில், மூன்றாவது கட்டமாக 46 பேர் டெல்லியில் இருந்து தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் மூலம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தனர்.*

*தமிழ்நாடு அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு வாகனங்கள் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு வழி அனுப்பி வைக்கப்பட்டனர். தாயகம் திரும்ப நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர்.*

---

### உதகையில் மாநாடு :

## ஆளுநரின் அழைப்பை புறக்கணித்த துணை வேந்தர்கள்!

### ஆளுநருக்கு நடுநிலையாளர்களும் – கல்வியாளர்களும் கடும் கண்டனம்!

*உதகை, ஏப். 27 -*

*உதகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்பு விடுத்த மாநாட்டை பெரும்பாலான பல்கலைக்கழக துணை வேந்தர்கள் புறக்கணித்துள்ளனர். உச்சநீதிமன்றத் தீர்ப்பை கடுகளவும் மதிக்காமல் செயல்படும் ஆளுநருக்கு நடுநிலையாளர்களும், கல்வியாளர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ்நாட்டு மக்களையும் ஆளுநர் ஆர்.என். ரவி தொடர்ந்து அவதூறாக பேசி வருகிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இடையூறு ஏற்படுத்தி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி, பொதுவெளியில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தொடர்ச்சியாக பேசி வருவதற்கு கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.*

*இதற்கிடையே, தமிழ்நாடு அரசின் மசோதாக்களை நிறுத்திவைத்த ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் சட்டவிரோதம் என உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது. மேலும், ஆளுநரால் நிறுத்தி வைக்கப்பட்ட பல்கலைக்கழக துணைவேந்தர் நியமன மசோதா உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கு சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, உச்சநீதிமன்றமே ஒப்புதல் வழங்கியது. மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டதாகவும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது. உச்சநீதிமன்றம் குட்டுவைத்து, கடும் கண்டனம் தெரிவித்த பிறகும், ஆளுநர் திருந்தவில்லை.*

**22 அரசு பல்கலை – 9 தனியார் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் புறக்கணிப்பு!**

*சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஆளுநர் ரவி, உதகையில் 2 நாள் துணைவேந்தர் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், துணைவேந்தர்கள் மாநாட்டை பல்வேறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் புறக்கணித்துள்ளனர். அதன்படி, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் சந்திரசேகர், கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தமிழ் வேந்தன் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர். மேலும், மதுரை பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர் இல்லாத நிலையில், பதிவாளரும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. ஆளுநர் அழைப்புவிடுத்த மாநாட்டை, கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக துணைவேந்தரும் புறக்கணித்துள்ளார்.*

*இதேபோன்று, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர் இல்லாத நிலையில், பொறுப்பாளர்கள் யாரும் மாநாட்டில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர். 22 அரசு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் ஆளுநர் மாநாட்டை புறக்கணித்துள்ளனர். 9 தனியார் பல்கலைக்கழக துணைவேந்தர்களும் ஆளுநர் கூட்டிய மாநாட்டில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர்.*